முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, கழக இளைஞர் அணிச் செயலாளர் – துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று, சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி தொகுதி 115 அ வட்டக்கழகம், மல்லன் பொன்னப்பன் தெருவில் 1000 பேருக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, எ.ஆர்.பி.எம்.காமராஜ் உள்ளிட்டோர் உள்ளனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, கழக இளைஞர் அணிச் செயலாளர் – துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று, திருவல்லிக்கேணி பகுதி, 116 அ வட்டக்கழகத்திற்கு உட்பட்ட பி.வி தெரு பகுதியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், 1000 பேருக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடர்!

10.03.2026 நிகழ்வுகள்

கழக மக்களவை - மாநிலங்களவை உறுப்பினர்கள் எழுப்பிய கேள்விகள்!

1. ஒன்றிய அரசு வர்த்தக பற்றாக்குறையை தீர்க்க எடுத்திருக்கும் நடவடிக்கை என்ன?

டி.ஆர்.பாலு

2024 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது நடப்பு நிதியாண்டில் வர்த்தக பற்றாக்குறை 25 சதவீதம் அதாவது 25 பில்லியன் அமெரிக்க டாலராக அதிகரித்துள்ளது குறித்து திமுக பொருளாளர் டி.ஆர். பாலு எம்.பி. கேள்வி எழுப்பியுள்ளார். வர்த்தக பற்றாக்குறை இவ்வளவு அதிகமாக இருப்பதற்கான காரணங்கள் என்ன? இந்தியப் பொருளாதாரத்தில் ஏற்படக்கூடிய தாக்கங்கள் என்ன? மற்றும் அரசாங்கம் இந்த மோசமான போக்கை எவ்வாறு நிவர்த்தி செய்யப் போகிறது? என்றும் அவர் கேட்டுள்ளார்.

2. நீட் கட்-ஆஃப் குளறுபடிகள் ஏன்? எய்ம்ஸ் மருத்துவமனை பயன்பாட்டிற்கு வருவது எப்போது?

பி.வில்சன்

அகில இந்திய ஒதுக்கீட்டிற்கு மாநில அரசு வழங்கிய இளங்கலை மற்றும் முதுகலை மருத்துவ இடங்களில் கடந்த மூன்று ஆண்டுகளில் ஒதுக்கப்பட்ட மொத்த OBC மருத்துவ இடங்களின் எண்ணிக்கை குறித்து திமுக மாநிலங்களவை உறுப்பினர் பி. வில்சன் கேள்வி எழுப்பியுள்ளார். கடந்த மூன்று ஆண்டுகளில் ஒவ்வொரு பிரிவிலும் NEET PG தகுதி கட்-ஆஃப்களின் விவரங்கள் மற்றும் சரிவுக்கான காரணங்கள் என்ன? 2014 முதல் அறிவிக்கப்பட்ட AIIMS இன் விவரங்கள், பட்ஜெட் ஒதுக்கீடு மற்றும் அவற்றின் தற்போதைய முன்னேற்றம் என்ன? அவற்றின் தாமதத்திற்கான காரணங்கள் என்ன? எனும் முக்கியமான கேள்விகளை அவர் எழுப்பியுள்ளார்.

3. உர இறக்குமதியில் சீனாவை சார்ந்திருப்பது ஏன்? உள்நாட்டு உற்பத்தியை மேம்படுத்தாது ஏன்?

கே.ஆர்.என். ராஜேஷ்குமார்

உர இறக்குமதியில் இந்தியா சீனாவை சார்ந்திருப்பது குறித்து திமுக மாநிலங்களவை உறுப்பினர் கே. ஆர்.என் ராஜேஷ்குமார் கேள்வி எழுப்பியுள்ளார். அதில் அவர் TMAP மற்றும் யூரியா-கரைசல் தயாரிப்புகள் இறக்குமதி செய்யப்பட்ட அளவு எவ்வளவு? அக்டோபர் 2025 இல் சீனா ஏற்றுமதியை நிறுத்தியதைத் தொடர்ந்து உர விலைகளில் ஏற்படக்கூடிய சாத்தியமான உயர்வை அரசாங்கம் மதிப்பிட்டுள்ளதா? உள்நாட்டு உற்பத்தித் திறனை மேம்படுத்துவதற்கு அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகளின் விவரங்கள்? என்றும் கேட்டுள்ளார்.

3. இந்திய உணவுக் கழகத்தின் செயல்பாடுகளை மேம்படுத்துக!

ஆர்.கிரிராஜன்

இந்திய உணவுக் கழகம் (FCI) மற்றும் மத்திய கிடங்கு கழகம் (CWC) ஆகியவற்றின் செயல்பாட்டு திறன்களை உறுதி செய்ய அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து திமுக மாநிலங்களவை உறுப்பினர் ஆர். கிரிராஜன் கேள்வி எழுப்பியுள்ளார். அதில் அவர் உணவு தானியங்களின் கொள்முதல், சேமிப்பு மற்றும் விநியோகத்தில் அதன் நிதி மேலாண்மையை மேம்படுத்துவதற்காக சாந்தா குமார் குழு பரிந்துரைத்த சீர்திருத்தங்களை அரசாங்கம் செயல்படுத்தியுள்ளதா? எனவும் குறிப்பிட்டுள்ளார்.

4. ஒன்றிய அரசின் பாரத் டாக்ஸி பயன்பாட்டுக்கு வருவது எப்போது?

டி.எம்.செல்வகணபதி

2002 ஆம் ஆண்டு பல மாநில கூட்டுறவு சங்கச் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட இந்தியாவின் முதல் கூட்டுறவு வாடகை கார் சேவையான பாரத் டாக்ஸி குறித்து திமுக மக்களவை உறுப்பினர் செல்வகணபதி கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்த சேவை நாட்டின் மற்ற பகுதிகளில் எப்போது அறிமுகப்படுத்தப்படும்? முக்கிய பொது மற்றும் தனியார் பங்குதாரர்களுடன் போடப்பட்டிருக்கும் ஒப்பந்தங்கள் யாவை? இந்த தளம் தொடங்கப்பட்ட தன் மூலம் உருவாக்கப்படக்கூடிய வேலைவாய்ப்பு வாய்ப்புகள் குறித்து அரசாங்கம் ஏதேனும் மதிப்பீட்டை நடத்தியுள்ளதா? தனியார் டாக்ஸி ஒருங்கிணைப்பாளர்களுடன் ஒப்பிடும்போது இந்த தளத்தின் முக்கிய அம்சங்கள் என்ன? மேற்கூறிய திட்டத்தின்கீழ் பெண் ஓட்டுநர்களின் பங்கேற்பை ஊக்குவிக்க செய்யப்பட்ட ஏற்பாடுகள் என்ன? என்றும் அவர் கேட்டுள்ளார்.

6. தமிழ்நாட்டில் சமர்த் திட்டத்தின் செயல்பாடுகளை மேம்படுத்துக!

சி.என். அண்ணாதுரை
க.செல்வம்

தமிழ்நாட்டில் கைத்தறி, பட்டு மற்றும் ஜவுளித் தொழிலாளர்கள் குறிப்பிடத்தக்க அளவில் உள்ள திருவண்ணாமலை மாவட்டங்களில் சமர்த் (ஜவுளித் துறையில் திறன் மேம்பாட்டுத் திட்டம்) செயல்படுத்த அரசாங்கம் செய்துள்ள மதிப்பாய்வுகள் குறித்து திமுக மக்களவை உறுப்பினர்கள் சி. என். அண்ணாதுரை மற்றும் செல்வம் கேள்வி எழுப்பியுள்ளனர். கடந்த மூன்று நிதியாண்டுகளில் சமர்த்தின் கீழ் சேர்ந்த, பயிற்சி பெற்ற மற்றும் சான்றிதழ் பெற்றவர்களின் எண்ணிக்கை, வேலைவாய்ப்பு மற்றும் சுய தொழில் பற்றிய விவரங்கள் என்ன? கடந்த மூன்று ஆண்டுகளில் தமிழ்நாட்டில், குறிப்பாக திருவண்ணாமலை மாவட்டத்தில் சமர்த் பயிற்சித் திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட, வெளியிடப்பட்ட மற்றும் பயன்படுத்தப்பட்ட நிதி பற்றிய விவரங்கள் என்ன? இந்தத் திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்ற இளைஞர்கள் மற்றும் கைவினைஞர்களுக்கு சந்தைப்படுத்தவும் நிலையான வேலை வாய்ப்புகளை உறுதி செய்யவும் அரசாங்கம் எடுத்து வரும் நடவடிக்கைகள் குறித்த விவரங்கள் என்ன? என்றும் அவர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

மக்கள் முதல்வரின் மனிதநேய விழா!

இன்று (11.03.2026) நடைபெறும் நிகழ்ச்சிகள் விவரம்!
மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!

சென்னை, மார்ச்.11-
அமைச்சர் - மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு
வருமாறு:

மனிதநேயம் - 38

இறையாண்மை முதல்வரின் கண்ணாகும்!
எளியோர் உயர்வே திராவிட ஆன்மீகம்!

நாள்: 11.3.2026, புதன்கிழமை,
மாலை: 5.00 மணி
இடம்: எஸ்.ஆர்.பேலஸ், ஓட்டேரி.
தலைமை:
இரா. வீரமணி,
மாவட்ட விவசாய அணி அமைப்பாளர்
ஆன்மீக அரங்கம்
சீர்வளர்சீர் சிவஞான பாலய சுவாமிகள்
மயிலம் பொம்மபுர ஆதீனம்
சீர்வளர்சீர் சாந்தலிங்க மருதாசல அடிகளார்
பேரூர் ஆதீனம் ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜ்யகார்ய
அப்பன் உலகாரிய ராமானுஜ எம்பார் ஜீயர் சுவாமி
ஸ்ரீபெரும்புதூர்
அன்புடன்: மாவட்ட விவசாய அணி
திரு.வி.க.நகர் தெற்குப்பகுதி

மனிதநேயம் - 38 அ

எல்லாம் தருவது தமிழ்நாடே!
எல்லா மக்களும் நம் உறவே!

நாள்: 11.3.2026, புதன்கிழமை,
மாலை: 6.00 மணி
இடம்: YMCA **ஹால், வேப்பேரி**
தலைமை:
ராஜேஸ்வரி ஸ்ரீதர்,
மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர்

வெளிநாடு வாழ் தமிழ் தலைவர்களின் வாழ்த்துரங்கத்தை துவக்கி வைப்பவர்:
திரு.எ.வ.வேலு
பொதுப்பணித்துறை அமைச்சர்
வாழ்த்துவோர்:
டத்தோ ஸ்ரீ டாக்டர் எம்.சரவணன்
மலேசிய நாடாளுமன்ற உறுப்பினர், மேனாள் மனிதவள அமைச்சர்
மலேசியா துணைத்தலைவர், மலேசிய இந்தியக் காங்கிரஸ்
செந்தில் தொண்டமான்
தலைவர் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்
மேனாள் முதல் அமைச்சர் / இலங்கை மேனாள் ஆளுநர்
முனைவர். நாகேஸ்வரன் அருள் ராசா
(கல்லாறு சதீஷ்)
தலைவர் - சுவீஸ் தமிழ் இலக்கிய சங்கம்.
அன்புடன்:
மாவட்ட மகளிர் தொண்டரணி
எழும்பூர் தெற்கு பகுதி

அமைச்சர் பி.கே.சேகர்பாபு
செயலாளர், சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! இராஜேஸ்வரி ஸ்ரீதர் எம்.சி. தலைமை!

எழும்பூர் தெற்குப் பகுதியில் மக்கள் முதல்வரின் மனிதநேய விழா - மாபெரும் புகழரங்கம்!

அமைச்சர் எ.வ.வேலு துவக்கி வைக்கிறார்! டத்தோ ஸ்ரீ டாக்டர் எம்.சரவணன் – செந்தில் தொண்டமான் – முனைவர் நாகேஸ்வரன் அருள் ராசா வாழ்த்துரை!

சென்னை, மார்ச் 11

மாவட்ட செயலாளர் அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் இராஜேஸ்வரி ஸ்ரீதர் எம்.சி. தலைமையில் சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், எழும்பூர் தெற்குப் பகுதியில், மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவை முன்னிட்டு, வெளிநாடு வாழ் தமிழ் தலைவர்களின் வாழ்த்தரங்கத்தை பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் துவக்கி வைத்தும், மலேசிய நாடாளுமன்ற உறுப்பினர், மேனாள் மனிதவள அமைச்சர், மலேசியா துணைத் தலைவர், மலேசிய இந்தியக் காங்கிரஸ் டத்தோ ஸ்ரீ டாக்டர் எம்.சரவணன், தலைவர், இலங்கை, தொழிலாளர் காங்கிரஸ் மேனாள் முதல் அமைச்சர் / இலங்கை மேனாள் ஆளுநர் செந்தில் தொண்டமான், தலைவர் - சுவீஸ் தமிழ் இலக்கிய சங்கம், (கல்லாறு சதீஷ்), முனைவர். நாகேஸ்வரன் அருள் ராசா ஆகியோர் வாழ்த்துகின்றனர்.

சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், எழும்பூர் தெற்கு பகுதியில் பகுதியில், மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவை முன்னிட்டு "மனிதநேய விழா38அ", எல்லாம் தருவது தமிழ்நாடே! எல்லா மக்களும் நம் உறவே! எனும் தலைப்பில், மாபெரும் புகழரங்கம் இன்று (11.03.2026, புதன்கிழமை) மாலை 6.00 மணியளவில், சென்னை, வேப்பேரியில், YMCA ஹாலில் நடைபெறுகிறது.

இப்புகழரங்கத்தில் மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் ராஜேஸ்வரி ஸ்ரீதர் தலைமை வகிக்கிறார். இந்து சமய அறநிலையத் துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும அமைச்சர் பி.கே.சேகர்பாபு, கோ.ஏகப்பன், வி. சுதாகர், சொ.வேலு எம்.சி, கே.எஸ்.எம்.நாதன், புனிதவதிஎத்திராசன் எம்.சி, ப. ஸ்ரீராமுலு, சரிதா மகேஷ்குமார் எம்.சி, சுதாதீனதயா என் எம்.சி, எல்.சுந்த ர்ராஜன் எம்.சி, பரிதிஇளம்சுருதி எம்.சி, கே.அன்னபூரணி, கே.வள்ளி, ஆர்.கிருஷ்ணவேணி, எஸ்.விஜயலஷ்மி, கே.எம்.ஸ்நோபா, ஜெ.தேவகிருபை, எஸ்.ஜான்சிராணி, சகினாபேகம், சூர்யாரகு, அமுல்பாண்டியன், ஜெயசூர்யா, யு.இலக்கியா, எம்.எழில், எஸ்.விஜயபாஸ்கர் முன்னிலை வகிக்கின்றனர்.

ஏ.நிர்மலாதேவி, ஏ. சுகந்தி, வி.நதியா, ஜி.ஞானதீபம், புனிதாமோகன் ஆகியோர் வரவேற்கின்றனர்.

இம்மாபெரும் புகழரங்கத்தில் வேந்தர் வி.ஐ.டி.பல்கலைக்கழகம் ஜி.விஸ்வநாதன், ஆசிரியர் தினமணி - வைத்திய நாதன், புதுக்கோட்டை கவிஞர் தங்கம் மூர்த்தி, தேர்வாணையக்குழு மேனாள் உறுப்பினர் லட்சுமணன் ஆகியோர் வாழ்த்துரைக்கின்றனர்.

மேலும் இப்பொதுக்கூட்டத்தில், இ.பரந்தாமன் எம்.எல்.ஏ., ப.தாயகம்கவி எம்.எல்.ஏ., அ.வெற்றிஅழகன் எம்.எல்.ஏ., ஜோசப்சாமுவேல் எம்.எல்.ஏ., கே.எஸ்.இரவிச்சந்திரன், தமிழன்பிரசன்னா, பி.எம்.யாழினி, ப. ரங்கநாதன், பி.கே.மூர்த்தி, கே.சந்துரு, சி.மகேஷ்குமார், எஸ்.மணிமுடி, வே. உமாகாந்த், சங்கரி நாராயணன், எம்.விஜயகுமார், என். பி. எம் ஷேக் அப்துல்லா, தேவஜவஹர், ஜி.மகா தேவன், இசட்ஆசாத் எம்.சி, கூ.பீ. ஜெயின் எம்.சி, எஸ்.முரளி, எஸ்.ராஜசேகர், செ.தமிழ்வேந்தன், எஸ்.சாமிகண்ணு, வே. வாசு, வ. முரளிதரன், எ.நாகராசன் எம்.சி, டி.எஸ்.பி.ராஜகோபால் எம்.சி, எம்.ஆர்.டி.நாகராஜ் மற்றும் கழக நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள் முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பிக்கி ன்றனர்.

வட்ட கழக செயலாளர் வி.விஜயகுமார், ஆர்பாபு நன்றி கூறுகிறார்கள்.

கழகத் தலைவர் — முதல்வர் பிறந்தநாள்:

சேத்துப்பட்டு, சர்வோதயா இல்ல மாணவிகளுக்கு அறுசுவை உணவு - நலத் உதவிகள்!

இ.பரந்தாமன் எம்.எல்.ஏ. வழங்கினார்!

சென்னை, மார்ச்.11-

கழகத் தலைவர் தமிழ் நாடு முதலமைச்சர் அவர்களின் 73-ஆவது பிறந்தநாளை முன்னிட்டு கழகச் சட்டத் துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் ஏற்பாட்டில், எழும்பூர் தொகுதியில் பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கிடும் வகையில் 12 தொடர் நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

இதன் ஒரு பகுதியாக, வார்டு எண்.108, சேத்துப்பட்டு, மெக்நிக்கல்ஸ் சாலையில் அமைந்துள்ள எஸ்.ஆர். எஸ். சர்வோதயா மகளிர் இல்லத்தில் நடந்த நிகழ்ச்சியில், அவ்வில்லத்தில் தங்கியிருக்கும் மாணவிகளுக்கு அறுசுவை இரவு உணவு, அவ்வில்லத்திற்கு ஒரு மாதத்திற்குத் தேவையான அரிசி, துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, சமையல் எண்ணெய், சர்க்கரை, மிளகாய், தனியா, ரவை, சேமியா, நெய், முந்திரி உள்ளிட்ட 32 வகையான மளிகைப் பொருட்கள் அடங்கிய தொகுப்பு மற்றும் அம்மாண விகளுக்குப் போர்வை ஆகியவற்றைச் சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன் வழங்கினார்.

இந்நிகழ்வில் அவைத் தலைவர் வெ.மருதன், மாவட்டப் பிரதிநிதி மா. காந்தி, 108-வது வட்டத் துணைச் செயலாளர் கே.சீனிவாசன், எழும்பூர் தெற்குப் பகுதி வர்த்தகர் அணி முன்னாள் அமைப்பாளர் இரா. வெற்றிவேல், எழும்பூர் தெற்குப் பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் ஜெ.சிலம்பரசன், எல்.சுகுமாறன்; 108-வது வட்ட இளைஞரணி அமைப்பாளர் மணிகண்டன், 108 'அ' வட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பு.சதிஷ்குமார், எழும்பூர் தெற்குப் பகுதி மகளிர் அணி துணை அமைப்பாளர் சி.முத்துலெட்சுமி, 108-வது வட்டத் துணைச் செயலாளர் ஜெ.இந்திராகாந்தி, முன்னாள் அவைத் தலைவர் கி.புஷ்பராஜ், தலைமைக் கழகப் பேச்சாளர் எம்.இ.தேவநிதி, பெரியமேடு சரவணன், எட்டு (எ) விஜயகுமார், 108-வது வட்டச் செயற்குழு உறுப்பினர் வீ.பாபு, 108-வது வட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் ஜோ.சந்தோஷ்குமார், பி.பிரவீண்குமார், 58 'அ' வட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் தி.ராஜ்குமார், 77-வது வட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ச.சதீஷ், 99-வது வட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் சு. குணா, பாக முகவர்கள் ஜி.பிரவீண்குமார், கவிதா; பாக இளைஞர் அணி கே. சூர்யா மற்றும் ஆர்.வேலு, முத்து க்குமார், கண்ணன் உள்ளிட்ட கழக நிர்வாகிகளும் அணிகளின் அமைப்பாளர்களும் கழகச் செயல்வீரர்களும் கலந்துகொண்டனர்.

க.புருஷோத்தமன் தலைமை! தண்டையார்பேட்டை

மண்டல தொழிற்கூடம் (R.W.S.) தொழிலாளர்களுக்கு அறுசுவை உணவு - நலஉதவிகள்!

பி.டி.சி.ரவி - பெரம்பூர் த.ஆறுமுகம் - எம்.பெருமாள் பங்கேற்பு!

சென்னை, மார்ச். 11

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத்தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாநகர போக்குவரத்து கழக ஊழியர் முன்னேற்ற சங்கத்தின் சார்பில் மண்டல தொழிற்கூடம் R.W.S. தண்டையார்பேட்டையில் இன்று (11.03.2026 புதன்கிழமை) காலை 12 மணி அளவில் தொழிலாளர்களுக்கு சங்கக் கொடி ஏற்றி இனிப்பு மற்றும் நலத்திட்ட உதவிகள் மற்றும் அறுசுவை உணவு வழங்கும் விழா நடைபெறுகிறது.

க.புருஷோத்தமன் தலைமை வகிக்கிறார்.

தலைவர் பி.டி.சி.ரவி, செயலாளர் த.ஆறுமுகம், பொருளாளர் எம்.பெருமாள் ஆகியோர் சிறப்புரையாற்றி அறுசுவை உணவு வழங்குகின்றனர்.

ஆர்.மதியழகன், எஸ். சுரேஷ்குமார், ஜி.அரி பிரகாஷ், பி.பாலசுப்பிரமணியன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். இதில் தொழில் சங்க நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

திருவொற்றியூர் மேற்கு பகுதி தி.மு.க. சார்பில் நூற்றுக்கணக்கான

இளைஞர்கள் - மாணவர்கள் ஒன்றிணைந்து உருவாக்கிய முதலமைச்சரின் முகம்!

மாதவரம் எஸ்.சுதர்சனம் முன்னிலை! வை.ம.அருள்தாசன் ஏற்பாடு!

சென்னை. மார்ச்.11-

கழகத் தலைவர் தமிழ்நாடு முதல்வர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எம்.எல்.ஏ வழிகாட்டுதலில் திருவொற்றி யூர் மேற்கு பகுதி திமுக சார்பில் பகுதி கழக செயலாளர் வழக்கறிஞர் வை. ம. அருள்தாசன் ஏற்பாட்டில் திருவொற்றியூர் மேற்கு பகுதியில் பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றது.

அதன் தொடர்ச்சியாக 7-3-26 அன்று மாலை ராமகிருஷ்ணா நகர் கடற்கரை கடற்கரை பகுதியில் தமிழக முதலமைச்சரின் பிறந்த நாளை சிறப்பாக கொண்டாடும் வகையில் 500 க்கும் மேற்பட்ட இளைஞர்கள் . மாணவர்கள் ஒன்றிணைந்து பிரம்மாண்டமான சாதனைய ஒன்றை நிகழ்த்தி யுள்ளனர்.

முதலமைச்சரின் புன்னைகை தாங்கிய முகத்தினை தத்ரூபமாக வெளிப்படுத்தும் வகையில் இளைஞர்கள் அனைவரும் ராணுவ கட்டுப்பாட்டோடு குறிப்பிட்ட வரிசையில் நின்று முதலமைச்சரின் முக வடிவத்தை உருவாக்கினர்.

வான் வழியே ட்ரோன் கேமரா மூலம் பார்க்கும் பொழுது முதலமைச்சரே நேரில் நிற்பது போன்ற பிரம்மாண்ட சாதனை அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளது.

தலைவரின் பிறந்தநாள் கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக, புதிய முயற்சியாக ஆயிரக்கணக்கான தொண்டர்கள் குறிப்பிட்ட ஓரிடத்தில் திரண்டு, வான்வெளியில் இருந்து பார்க்கும் போது "தலைவரின் உருவம்" துல்லியமாகத் தெரியும் வகையில் அணிவகுத்து நின்று சாதனை படைத்தது. காண்போரை கவர்ந்தது.. தமிழ்நாடு முதல்வர் கழகத்தலைவர் அவர்களுக்கு பிறந்தநாள் வாழ்த்து கூறிய அதே வேளையில், "எல்லார்க்கும எல்லாம்" என ஆட்சி செய்யும் திராவிட மாடல் நாயகருக்கு அவருடைய முக வடிவில் நன்றி தெரிவித்தனர் .

தொடர்ந்து 2.0 தொடர எல்லாரும் "ஸ்டாலின் தொடரட்டும்- தமிழ் நாடு வெல்லட்டும்" என முழக்கமிட்டனர்.

தலைவன் மீது கொண்ட அளப்பரிய பற்றை வெளிப்படுத்தும் விதமாக அமைந்த இந்த நெகிழ்ச்சியான நிகழ்வு அமைந்துள்ளது. மேலும் திராவிட மாடல் 2.0 அமைந்திடவும் கழகத் தலைவர் வாழ்க வாழ்க என வாழ்த்தியும் விண்ணைப் பிளக்க முழக்கமிட்டனர்.

இந்த புதிய முயற்சி காண்போரை வெகுவாக காவர்ந்து திராளான பொதுமக்கள் கண்டு களித்தனர்.

இந்நிகழ்வில் பகுதி பொருளாளர் எம்.வஜ்ரவேல் மாவட்ட பிரதிநிதிகள் எம். சந்திரகுமார் ந. ராம்குமார் மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் ஆர்.நவக்குமார் வை. சின்னையன் தழவை எஸ்.ரஞ்சித் வை.ம. கண்ணதாசன் டி. சக்கரவர்த்தி எம்.கார்த்திக்.கே. செந்தில். பி. கே.எஸ் சதீஷ்குமார். எஸ். தாமரை. எஸ்.ராஜேஷ். மு. பாபு. எம். ராமு. ம.சுந்தர். கே.சரவணன். தேசிங். வாசு. எஸ்.சேதுபதி. முத்து முருகன். பி.ராஜா .ஆர். பாலாஜி. அரவிந்தன்.ந. ராஜா. ஜி.குணசேகரன். மூர்த்தி. ஜி. கணேஷ். வி. சி. பிரபாகரன். பா. அஜித். எம்.சந்தோஷ். ராஜேஷ். டி. கார்த்திகேயன். எஸ். ஜோயல். பா. லிஷ்வா. பா. யோகித். ஜெ. மாரி முத்து. எஸ். வினோத். ஜெ. விக்னேஷ். எஸ்.சதீஷ். உதயன். ரமேஷ் ரோணி. டைட்டஸ். சரவணன். பூங்கொடி. வசந்தி. பூங்கொடி. வனிதா. வித்யா. புனிதா. பிரியா. மற்றும் மாவட்ட. பகுதி.வட்டக் கழக நிர்வாகிகள். சார்பு அணிகளின் நிர்வாகிகள். திரளாக பங்கேற்றனர்.